ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2019 நவெம்பர் 14 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2019 ஒத்தோபர்

**கொ.மு.சு**
சுட்டெண் பெறுமதி
**57.6**
2019 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2.9 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

2019 ஒத்தோபரில் தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 57.6 சுட்டெண் பெறுமதிக்கு அதிகரித்தமைக்கு 2019 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகளில் அதிகரிப்பு, முக்கியமாக எதிர்வரும் பண்டிகைக் காலக் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக உணவு மற்றும் குடிபானத் துறையின் தயாரிப்பில் அவதானிக்கப்பட்டது. அதேவேளை, தொழில்நிலையும் உணவு மற்றும் குடிபானங்களின் தயாரிப்பு மற்றும் அணியும் ஆடைகள் துறைகளில் அதிகரித்தது. இதற்கு எதிர்வரும் காலத்தில் ஏற்படக்கூடிய உயர்ந்த கேள்வியை ஈடுசெய்வதற்காக உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு புதிய ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும்.



மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | செத். | ஒத். | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| கொ.மு.சு | 54.7 | 57.6 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | | | |
| புதிய கட்டளைகள் | 58.1 | 59.7 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| உற்பத்தி | 52.0 | 60.2 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| தொழில்நிலை | 55.6 | 58.2 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 56.6 | 54.1 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோக நேரம் | 50.0 | 50.5 | + | கால நீடிப்பு, உயர்ந்த வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

புதிய கட்டளைகளும் உற்பத்தியும் உயர்ந்த வீதத்தில் விரிவடைந்த போதும், கொள்வனவுகளின் இருப்புக்கள் பெருமளவிற்கு மாறாமல் இருந்தமைக்கு முன்னைய மாதங்களிலிருந்து ஒன்றுசேர்ந்த இருப்புக்கள் முன்கொண்டு வரப்பட்டமையே காரணமாகும். மேலும், நிரம்பலர் விநியோக நேரம் ஓரளவு மெதுவான வீதத்தில் நீடிக்கப்பட்டது.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பின் அனைத்து துணைச் சுட்டெண்களும் 50.0 தொடக்க அளவினை விஞ்சி (நடுநிலை) மீளாய்விற்குரிய காலப்பகுதியில் தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த விரிவாக்கத்தினை சமிக்ஞைப்படுத்தின.

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

2019 ஒத்தோபரில் உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 49.8 கொண்ட பெறுமதியினைப் பதிவுசெய்தது. இது 2019 செத்தெம்பரிலிருந்து 0.1 சுட்டெண் புள்ளிகளைக் கொண்டதொரு அதிகரிப்பாகும்.

2019 ஒத்தோபரில் இந்தியா மற்றும் சிங்கப்பூரின் தயாரிப்பு கொ.மு.சு மெதுவடைந்த வேளையில் ஐக்கிய இராச்சியம், ருசியா, சீனா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் யூரோ வலையங்களின் அச்சுட்டெண் மேம்பட்டது.

*(மூலம்: மார்க்கிட்[1], நவெம்பர் 13, 2019 இல் உள்ளவாறு)*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**2019 ஒத்தோபரில் பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 56.9 சுட்டெண் புள்ளிகளினால் அதிகரித்தமைக்கு** 2019 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் புதிய வியாபாரங்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஏற்பட்ட வலுவான வளர்ச்சி முக்கிய ஆதரவாக அமைந்தது.

புதிய வியாபாரங்கள் 19 மாதங்களில் மிக உயர்ந்த மட்டத்தினை அடைந்தமைக்கு புதிய வியாபாரங்களில் நிதியியல் பணிகள் மற்றும் காப்புறுதித் துறைகள் ஆதிக்கம் பெற்றிருந்தமையே கரணமாகும். வியாபார நடவடிக்கைகளும் 2019 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் ஒத்தோபரில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியமைக்கு நிதியியல் பணிகள், மானிட சுகாதார நடவடிக்கைகள் மற்றும் அஞ்சல் மற்றும் கூரியர் நடவடிக்கைகள் பக்கபலமாக விளங்கின. எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் தொடர்பான விளம்பரப் பிரச்சாரங்களும் வங்கிகளின் அதிகரித்த ஊக்குவிப்பு நடவடிக்கைகளும் வியாபார நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தன.

எனினும், பணிகள் துறையின் தொழில்நிலை தொடர்ந்தும் ஏழாவது மாதமாக 50 அடிப்படை மட்டத்திற்கும் குறைவாக தொடர்ந்தும் காணப்படுகின்றமைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதில் காணப்படும் தாமதங்களும் கையினால் செய்யப்படும் வேலைகள் எந்திரங்களினால் மேற்கொள்ளப்படுவதுமே காரணங்களாகும். அதேவேளை, நிலுவையிலுள்ள வேலை 20 மாத சுருக்கத்தின் பின்னர் 2019 ஒத்தோபரில் அதிகரித்து இத்துறையின் மிகையான இயலளவு குறைவடைந்து வருவதனை எடுத்துக்காட்டியது. இதற்கு, புதிய வியாபாரங்களிலும் வியாபார நடவடிக்கைகளிலும் வலுவான வளர்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் தொழில் மட்டங்களில் ஏற்பட்ட சுருக்கமே ஓரளவு காரணமாகும்.

| மாறி | செத். | ஒத். | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **52.7** | **56.9** | + | **அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தல்** |
| | | <u>கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்</u> | | |
| **புதிய வியாபாரங்கள்** | 55.0 | 61.5 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| **வியாபார நடவடிக்கை** | 52.5 | 59.0 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| **தொழில்நிலை** | 47.0 | 44.0 | - | வீழ்ச்சி, உயர்ந்த வீதத்தல் |
| **நிலுவையிலுள்ள பணிகள்** | 45.8 | 51.6 | + | அதிகரிப்பு, வீழ்ச்சியிலிருந்து |
| **நடவடிக்கைக்கான எதிர்பார்ப்புக்கள்** | 63.4 | 68.2 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சுற்றுலாவிற்கான எதிர்வரும் உச்ச பருவகாலம் பண்டிகைக் காலம் மற்றும் அரசியல் துறையில் எதிர்பார்க்கப்படும் உறுதிப்பாடு என்பனவற்றின் காரணமாக அடுத்த மூன்று மாதங்களுக்கான சேவை வழங்குநர்களின் எதிர்பார்ப்புக்கள் மேம்பட்டன. பதிலிறுப்பாளர்களும் கூட உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் அவர்களது வியாபாரம் உத்வேகம் பெற்றமையினை எடுத்துக்காட்டினர்.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**56.9**
**2019 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 4.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**



மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு**

உலகளாவிய பணிகள் கொ.மு.சு கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக குறைவடைந்து ஒத்தோபரில் 51.0 இற்குத் தளர்வடைந்தது.

ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனாவின் பணிகள் கொ.மு.சு 2019 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் ஒத்தோபரில் அவற்றின் பணிகள் துறைகள் மேம்பட்டமையை எடுத்துக்காட்டிய வேளையில் யப்பான் மற்றும் இந்தியா அவற்றின் பணிகள் நடவடிக்கைகளில் வீழ்ச்சியை எடுத்துக்காட்டின. ஐக்கிய இராச்சியத்தின் பணிகள் கொ.மு.சு மாற்றமின்றிக் காணப்பட்டது

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.